# அன்பு என்ற பெயர் கொண்டோனே

அன்பு என்ற பெயர் கொண்டோனே
அன்பைத் தாராயோ எம்மை ஒன்றுசேராயோ(2)
ஒரே தந்தை ஒரே ஆண்டவர்
என்று நாங்கள் ஒரு குடும்பம் என்றறிவோமே
எனவே ஒன்றி வாழ்வோமே
அன்பு என்ற பெயர் கொண்டோனே

**1**
ஏற்றத்தாழ்வில் பிளவு கொண்டோம் அன்பைத்தாராயோ
அன்பைத்தாராயோ அன்பைத்தாராயோ
ஏழை செல்வர் எனப்பிரிந்தோம் ஒன்றுசெராயோ
ஒன்றுசெராயோ ஒன்றுசெராயோ ( 2 )
அன்பைத் தாராயோ எம்மை ஒன்று சேராயோ
அன்பு என்ற பெயர் கொண்டோனே

**2**
ஜாதி என்ற பிளவு கொண்டோம் அன்பைத்தாராயோ
அன்பைத்தாராயோ அன்பைத்தாராயே
சமதர்மம் இணைந்து வாழ ஒன்று சேராயோ
ஒன்றுசேராயோ ஒன்று சேராயோ ( 2 )
அன்பைத் தாராயோ எம்மை ஒன்றுசேராயோ

**3**
மதங்கள் எனும் பிரிவைக்கொண்டோம் அன்பைத்தாராயோ
அன்பைத்தாராயோ அன்பைத்தாராயே
மனம் ஒன்றி இணைந்து வாழ ஒன்று சேராயோ
ஒன்றுசெராயோ ஒன்றுசெராயோ ( 2 )
அன்பைத் தாராயோ எம்மை ஒன்றுசெராயோ